Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

நகர் ஊரமைப்புத்துறை

கன்னியாகுமரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

உறுப்பினர் செயலர் அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர் - திரு. **கா. மோகன்**, பி.இ.,

---

**ந.க.எண். 131/2022 நாஊ திகு** நாள் [illegible].04.2022

பொருள் : **மனைப்பிரிவு** - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - நாகர்கோவில் உள்ளூர் திட்டப்பகுதி - கன்னியாகுமரி மாவட்டம் -அகஸ்தீஸ்வரம் வட்டம் - அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம் - தேரேகால்புதூர் ஊராட்சி - தேரேகால்புதூர் கிராமம் - நில அளவை **எண்.166/1A, 3A, 4A, 6A, 167/2A** மற்றும் **172/4B2 -இல் 9157.00 ச.மீ** பரப்பளவு இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி வழங்குதல் – குறித்து.

பார்வை :

1. மனுதாரர் திரு.P.பால்ராஜ் மற்றும் மூன்று பேர் வடசேரி என்பவரது விண்ணப்பம் நாள்.24.01.2022 இணையதள விண்ணப்பம் எண்.202103801017912 நாள்.21.12.2021.
2. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண் 19799/2020/போ நாள் 24.12.2020.
3. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்.29.03.2022 மற்றும் 19.04.2022.
4. மனுதாரர் திரு.P.பால்ராஜ் மற்றும் மூன்று பேர் வடசேரி கடிதம் மற்றும் இணைப்புகள் நாள்.13.04.2022.
5. அரசாணை எண் 138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 04.06.2004.
6. அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் 31.01.2020.
7. அரசாணை எண் 141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை UD4(3) நாள் 23.09.2020.
8. அரசாணை எண் 181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை UD4(1) நாள் 09.12.2020.
9. அரசு கடிதம் எண் 19113/நவ4(3)/2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள் 30.08.2017
10. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் 13686/2017/LA1, நாள் 08.09.2017.
11. மனுதாரர் திரு.P.பால்ராஜ் மற்றும் மூன்று பேர் வடசேரி, கட்டணம் செலுத்தி பெறப்பட்ட நாள். 21.04.2022.

-----------------

உத்தரவு

1. பார்வை 1-இல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட நாகர்கோவில் உள்ளூர் திட்டப்பகுதி, **அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம், தேரேகால்புதூர் ஊராட்சி, தேரேகால்புதூர் கிராமம் - நில அளவை எண். 166/1A, 3A, 4A, 6A, 167/2A மற்றும் 172/4B2 -இல் 9157.00 ச.மீ** பரப்பளவு இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல்/இசைவுக்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை 3-ல் சுட்டிய 29.03.2022 தேதிய இவ்வலுவலக கடிதம் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டது. பார்வை 4-ல் சுட்டிய கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடு பகுதி 'A' ஆகியவற்றை உள்ளாட்சி பெயரில் தானமாக தானப்பத்திர எண்.1546/2022 நாள்.12.04.2022-இல் ஒப்படைக்கப்பட்டு தானப்பத்திரம் அசல் ஆவணம் மற்றும் பொதுஒதுக்கீடு 'B' **TANGEDCO** பெயரில் ஒப்படைக்கப்பட்டு தானபத்திரம் எண்.1547/2022 நாள்.12.04.2022 அசல் ஆவணம் பெறப்பட்டுள்ளது.
2. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/நாஉதிகு எண்.**13/2022** என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதியும் திட்ட அனுமதி எண் தி.அ/ம.வ/நாஉதிகு எண்.**10/2022** என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதியும் வழங்கப்பட்டு 3 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானபத்திரங்கள் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

   **மேற்படி, உத்தேச மனைப்பிரிவிற்கு ஊராட்சி கட்டிட விதிகள் மற்றும் வழிமுறைகளை பின்பற்றி தலைவர், தேரேகால்புதூர் ஊராட்சி அவர்களிடம் இருந்து மனுதாரர் இறுதி ஒப்புதல் பெற்றுக்கொள்ள வேண்டும்.**

3. மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்:9(ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.
4. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும், உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.
5. செயலாணைக்கடிதம் மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

சிறப்பு நிபந்தனை:

1. (a)பார்வை 8-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 6-ல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47 (11)-ன்படியும் மாநகராட்சி/நகராட்சி பகுதி எனில் " Collecting the necessary fees including the charges for providing amenities like roads. Storm water drains and street lights from the applicants " After collecting the necessary fees the final layout sketch, permit of planning authority along with approval of local body shall be issued to the applicant(s) directly.

   (b) மாநகராட்சி/நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along the permit of local body to the applicant(S) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenitities like storm water drains. water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc. as per the standards specified by the local Body".

2. (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது, ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண் 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, நாள் 31.01.2020-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்படவேண்டும்.

3. பார்வை 9 மற்றும் 10-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. " The Tamil Nadu Government in G.O.(Ms)No.112, Housing and Urban Development Department, dated 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation and Development) Act, 2016. The Promotor has to advertise, market, book,sell or offer for sale, are invite person to purchase in any manner, any plot, of it only after building as the case may be in any Real Estate Project or pad of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority-ன் படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. மனுதாரர் நன்னிலை வரியாக ரூ.9000/-னை 21.04.2022-இல் அரசு கணக்கிலும், அபிவிருத்தி கட்டணமாக ரூ.18,500/-னை 21.04.2022-இல் இந்தியன் வங்கி கணக்கிலும், கூராய்வு கட்டணமாக ரூ.14,000/-னை 28.12.2021-இல் இந்தியன் வங்கி கணக்கிலும், செலுத்தியுள்ளார்.

உறுப்பினர் செயலர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்.
கன்னியாகுமரி மாவட்டம்.

இணைப்பு
1. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடங்கள் -3
2. மனைப்பிரிவு நிபந்தனைகள் -3
3. பார்வை 4-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட தானபத்திரம் அசல் -2

பெறுநர்

தலைவர்,
தேரேகால்புதூர் ஊராட்சி,
தேரேகால்புதூர்.

நகல் -

1. செயலாளர் (திட்டம்),
தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையர்(TNRERA)
1ஏ, முதல் தளம்,
காந்தி இர்வின் பாலம் ரோடு,
எழும்பூர், சென்னை
2. கண்காணிப்பு பொறியாளர்,
தமிழ்நாடு மின்சார வாரியம்,
நாகர்கோவில்
3. மனுதாரர்.
திரு. P. பால்ராஜ் மற்றும் மூன்று பேர்
50/3-1, தழுவிய மகாதேவர் 6-வது தெற்கு தெரு,
சக்தி கார்டன், வடசேரி, கன்னியாகுமரி மாவட்டம். } கடிதம் மட்டும்
4. வைப்பறை - வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனை
5. உதவி இயக்குநர்,
நில அளவை மற்றும் பதிவேடுகள் அறை,
நாகர்கோவில்
6. வட்டாட்சியர்,
அகஸ்தீஸ்வரம் வட்டம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்
நாகர்கோவில்.

## தேரேகால்புதூர் ஊராட்சி தலைவர் அவர்களின் செயல்முறை

முன்னிலை : திரு M.சேசு/மு

செ.மு.எண். 3/ 2022 நாள்: 12.05.2022

பொருள்: மனைப்பிரிவு — கன்னியாகுமரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம் - தேரேகால்புதூர் ஊராட்சி — அகஸ்தீஸ்வரம் வட்டம் - தேரேகால்புதூர் வருவாய் கிராமம் - சர்வே எண்: **166/1A,3A,4A,6A,167/2A** மற்றும் **172/4B2** -ல் **9157.00** ச.மீ பரப்பளவு இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்கப்பட்டது — மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிடல்.

பார்வை:
1. கன்னியாகுமரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் உறுப்பினர் செயலர் அவர்களின் கோப்பு எண் : ந.க..எண் : 131/2022 நாஉதிகு நாள் : 29.04.2022
2. அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 04.02.2019
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 13686/2017/எல்ஏ-1, நாள். 08.09.2017
4. நகர் ஊரமைப்பு இயக்குனர் , சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 19799/2020/போ , நாள். 24.12.2020
5. தானப்பத்திரம் எண்: 1546/2022 , நாள் : 12.04.2022
6. தமிழ்நாடு ஊராட்சி கட்டட விதிகள் 1997
7. தேரேகால்புதூர் ஊராட்சி பலவகை வரவு ரசீது எண்: 40 94 30 நாள்: 12.05.2022

-------

**ஆணை:**

அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம் அகஸ்தீஸ்வரம் வட்டம் தேரேகால்புதூர் ஊராட்சி தேரேகால்புதூர் வருவாய் கிராமம், சர்வே எண் : **166/1A,3A,4A,6A,167/2A மற்றும் 172/4B2** -ல் **9157.00** ச.மீ பரப்பளவு உள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/நா.உ.தி.கு எண்: **13/2022** என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதியும், மேற்படி உத்தேச மனைப்பிரிவிற்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-ன் பிரிவு 49-ன் கீழ் திட்ட அனுமதி எண் தி.அ/ம.வ/நாஉதிகு எண் : **10/2022** என எண்ணிடப்பட்டு சிறப்பு நிபந்தனைகளுடன் பார்வை 1-ன் படி

கன்னியாகுமரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் உறுப்பினர் செயலரால் திட்ட அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

| வ.எண் | விவரம் | பரப்பளவு |
|---|---|---|
| 1. | மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பளவு | 9157.00 ச.மீ (2.262 ஏக்கர் ) |
| 2. | மனைப்பிரிவு அமைந்துள்ள சர்வே எண். | 166/1A, 3A, 4A, 6A, 167/2A மற்றும் 172/4B2 |
| 3. | மனைப்பிரிவு அமைந்துள்ள ஊராட்சியின் பெயர் | தேரேகால்புதூர் |
| 4. | மனைப்பிரிவு அமைந்துள்ள வருவாய் கிராமத்தின் பெயர் | தேரேகால்புதூர் |
| 5. | ஒதுக்கப்பட்ட மொத்த மனைகள் | 30 |
| 6. | மனைப்பிரிவில் அமைக்கப்பட்ட தார்சாலைகளின் பரப்பு | 3521.79 ச.மீ |
| 7. | பொது உபயோகத்திற்காக ஊராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பரப்பு | 28.45 ச.மீ |
| 8. | தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பரப்பு | 28.65 ச.மீ |
| 9. | பூங்கா பரப்பளவு | 592.09 |
| 10 | விற்பனைக்குரியவை EWS மனைகளின் பரப்பு | இல்லை |

தேரேகால்புதூர் ஊராட்சி தேரேகால்புதூர் வருவாய் கிராமம், சர்வே எண்கள் : **166/1A,3A,4A,6A,167/2A மற்றும் 172/4B2** -ல் 9157.00 ச.மீ பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவிற்காக தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி வழங்கப்பட்ட மனையில் சாலைப்பகுதி அமைந்துள்ள **3521.79** ச.மீ மனை, பூங்கா ஒதுக்கீடு **595.09** ச.மீ மற்றும் பொது உபயோகத்திற்காக ஊராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட **28.45** ச.மீ மனை ஆகியவை நாகர்கோவில் சார்பதிவாளர் அலுவலகத்தில் தானப்பத்திரம் எண்: **1546/2022** நாள்: **12.04.2022**-ன் படி அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தேரேகால்புதூர் ஊராட்சிக்கு வேண்டி தலைவர், தேரேகால்புதூர் ஊராட்சி அவர்கள் பெயருக்கு பதிவு செய்து அசல் பத்திரம் பெறப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதி 1977-ன் படி மனைப்பிரிவு அங்கீகார கட்டணம், மனைப்பிரிவில் ஏற்படுத்தப்பட வேண்டிய குடிநீர் வசதி மற்றும் மனைப்பிரிவில்

ஏற்படுத்தப்பட வேண்டிய மின் வசதி மற்றும் இதர வளர்ச்சி கட்டணங்களுக்கான தொகை ரூ.579420/- தேரேகால்புதூர் ஊராட்சி பலவகை ரசீது எண் : 40 94 30 நாள்: 12.05.2022 ___ன் படி பெறப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் உறுப்பினர் செயலரால் பார்வை 1-ன்படி வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதியின் அடிப்படையில் அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம், அகஸ்தீஸ்வரம் வட்டம், தேரேகால்புதூர் ஊராட்சி தேரேகால்புதூர் வருவாய் கிராமம், சர்வே எண்: **166/1A,3A,4A,6A,167/2A மற்றும் 172/4B2** -ல் **9157.00** ச.மீ (2.262 ஏக்கர்) பரப்பளவு உள்ள இடத்தில் அமையவுள்ள உத்தேச மனைப்பிரிவிற்கு கீழ்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கி இதன்படி உத்தரவிடப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

2. பார்வை 3-ல் சுட்டியுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் சுற்றறிக்கையின்படி, " The Tamil Nadu Government in G.O. Ms. No.112, Housing and Urban Development Department, Dated: 22.06.2017 have approved the Tamilnadu Real Estate (Regulation & Development) Act 2016. The Promoter has to advertise, Market, book, sell or offer for sale or invite persons to purchase in and manner any plot of it only after registering the real estate Project with the Real Estate Regulatory Authority".

3. This order is passed subject to the outcome of the Writ petition WP (MD) No. 8948 of 2019.

4. இம்மனைப்பிரிவில் அமைந்துள்ள கட்டிடங்கள் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 242(3)-ன் படி தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டிடங்கள் விதிகள், 1997க்குட்பட்டு தனியாக கட்டிட வரைபட அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும்.

5. நாகர்கோவில் உள்ளூர் திட்டக்குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறான மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் செய்தல் கூடாது.

6. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (SPLAY) அமைக்கப்பட வேண்டும்.

7. அங்கீகரிக்கபட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்புகள் கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதில் கடை பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் ஏதும் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது.

8. அங்கீகரிக்கபட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டட வரம்பு விடப்பட வேண்டும். மனைப்பிரிவில் அமையும் பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினருக்காக ஒதுக்கப்படும் மனைகளுக்கு 1 மீட்டரும், மற்ற மனைகளுக்கு (Other than EWS Sites) 9 மீ அகலம் வரையிலான சாலைகளுக்கு 1.5 மீட்டரும், 9 மீட்டருக்கு அதிகமாகவும் மற்றும் 18 மீட்டர் வரையிலுமான அகலமுள்ள சாலைகளுக்கு 3.0 மீட்டரும், 18 மீட்டருக்கு அதிகமாகவும் மற்றும் 30.50 மீட்டருக்கு அதிகமாக அகலமுள்ள சாலைகளுக்கு 6 மீட்டர் என்ற அளவிலும் கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். ஊராட்சி கட்டிட (5 அடி) உயரத்திற்கு மேறபடாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்தவித கட்டிடமோ சுவரோ கட்டுதல் கூடாது.

9. 9.00 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லா மனைப்பிரிவு சாலைகளிலும் நிழல் தரும் மரங்கள் கண்டிப்பாக நடப்பட வேண்டும். மரங்கள் சாலைகளின் எல்லையிலிருந்து 1.00 மீட்டர் விடப்பட்டு சாலைகளின் ஓரமாக இருபுறமும் 9.00 மீட்டர் இடைவெளிகளில் நடப்பட வேண்டும்.

10. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் தேரேகால்புதூர் ஊராட்சியிலிருந்து கட்டட வரைபட அனுமதி பெற வேண்டும்.

11. மனைப்பிரிவில் கடை/கடைகளுக்கானமனைகள் ஒதுக்கபட்டிருந்தால், அம்மனைகளை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்காக மட்டுமே கண்டிப்பாக பயன்படுத்த வேண்டும்.

12. மனுதாரர் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரித்த மன்றத் தீர்மான எண்ணும் நாளும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

13. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு, நகர் ஊரமைப்புத் துறையின் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனைகள் வாங்குபவர்களுக்கு கண்டிப்பாக வழங்கப்பட வேண்டும்.

14. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் மற்றும் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 0.6மீ x 1.2மீ அளவிலான நிரந்தர அறிவிப்பு தகவல் பலகை பொதுமக்கள் பார்வைக்காக நிறுவப்பட வேண்டும்.

15. மனைகள் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகளை ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது.

16. தற்போது செலுத்தப்படும் மனைப்பிரிவு அங்கீகார கட்டணம், மனைப்பிரிவில் ஏற்படுத்தப்பட வேண்டிய குடிநீர் வசதிக்கான கட்டணம் மற்றும் மனைப்பிரிவில் ஏற்படுத்தப்பட வேண்டிய மின் வசதிக்கான கட்டணங்களில் கூடுதல்கள் ஏதேனும் செலுத்த வேண்டி இருந்தால் அதற்கான வித்தியாச தொகையினை விண்ணப்பத்தாரர் உடன் தேரேகால்புதூர் ஊராட்சிக்கு செலுத்த வேண்டும்.

17. மனைப்பிரிவு அங்கீகாரம் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் தகவல்கள் ஏதேனும் போலியானவையெனவோ அல்லது உண்மைக்கு புறம்பானவையெனவோ பின்னர் தெரிய வந்தாலோ அல்லது மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கியதால் சுற்றுப்புற சூழலுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எந்தவித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படுவதுடன் சட்டப்பூர்வ மேல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

12/5/2022

தலைவர்
தேரேகால்புதூர் ஊராட்சி

தேரேகால்புதூர் ஊராட்சி

பெறுநர்

திரு P. பால்ராஜ் மற்றும் மூன்று பேர்
வடசேரி, நாகர்கோவில்
கன்னியாகுமரி மாவட்டம்.

**நகல்:**

1. உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக்குழுமம், ஆட்சியர் அலுவலக வளாகம், நாகர்கோவில்.
2. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), நாகர்கோவில்.
3. சார்பதிவாளர் , நாகர்கோவில்.
4. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம்.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate